தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 ஏப்ரல் 10, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

110—

இரயில்வே மேம்பாலம்

***18400—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53-91—1a

[2002 ஏப்ரல் 10

கோயம்புத்தூர் நகரில் வாலாங்குளம் புறவழிச் சாலையின் மீது கட்டப்படவுள்ள இரயில்வே மேம்பாலப் பணிகள் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோயம்புத்தூர் நகர், வாலாங்குளம் புறவழிச்சாலையின் பணியை ஹட்கோ கடனுதவியுடன் ரூ.14 கோடி செலவில் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பணிக்கான வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணி, இன்னும் ஒருமாத காலத்திற்குள் முடிவடைந்துவிடும். பின்னர், ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட்டு, பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வி.கே. லட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, வாலாங்குளம் புறநகர்ப் பகுதி சாலை என்பது, ஓர் மிக முக்கியமான சாலை. இந்தச் சாலையில் ஓர் இரயில்வே கேட் இருக்கின்றது. இது ஒரு நாளைக்கு 52 தடவை மூடித் திறக்கப்படுகின்றது. இதனாலே போக்குவரத்து மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படுகின்றது. இதற்காக ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வந்தபோது, அந்தப் பாலத்தைக் கீழ்நிலைப் பாலமாகக் கட்ட, அதற்கு மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருந்து. அது தெரிந்த பின்னாலே, அதை உயர்மட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்று நான் பலமுறை அந்தப் பொறியாளரிடத்திலே வாதாடி என்னுடைய கோரிக்கையை வைத்திருக்கிறேன். ஆகவே, அது உயர்நிலைப் பாலமாகக் கட்டப்படுமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அந்தப் பாலத்தினுடைய அவசர, அவசியத்தினைக் கருதி, அந்தப் பாலத்தை மேம்பாலமாகத்தான் கட்ட அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கே.சி. கருணாகரன்.*

2002 ஏப்ரல் 10]

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பாலம், சிங்காநல்லூர் சட்டப் பேரவைத் தொகுதியில் வருகிறது. நானும் இந்தக் கேள்வியை ஏற்கெனவே கிளப்பியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே.எல். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு நாகப்பட்டினம்-கடலூர், கடலூர்-மைசூர் சாலை இருப்புப் பாதை கடவு எண் 147-க்குப் பதிலாக கோயம்புத்தூர் மாநகரம், ஒண்டிப்புதூர் எல்லைக்குள் மேம்பாலம் கட்டுவதற்கான 15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம், இந்தத் திட்டத்தோடு இணைந்தது. இப்போது சொல்லப்பட்டிருக்கக்கூடிய வாலாங்குளம் மேம்பாலம், அதோடு ஒண்டிப்புதூர் இரயில்வே மேம்பாலம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரே திட்டம் என்பதாக எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தப் பணிகள் இரண்டும் எப்போது தொடங்கி, எந்தக் காலத்திற்குள் முடிவு அடையும் என்பதை அறிவிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனி வினா தொடுப்பார்கள் என்றால், பதில் தரத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து பொள்ளாச்சி செல்லுகின்ற பாதையிலே ஆற்றுப் பாலம் உள்ளது. அங்கு ஏற்கெனவே பாலம் ஒன்று இருந்தது. அதோடு additional ஆக ஒரு பாலம் கட்டி சுங்க வரி அதிகமாக வசூல் செய்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு, இந்தக் கேள்விக்குரிய பதில் மட்டும்தான் இருக்கும்; இது தொடர்புடையது தான் இருக்கும். திரு. வி. ஜெயராமன்.

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாங்குளம் மேம்பாலம் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை முன்னின்று செய்து கொடுப்பதற்காக கோவை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பாலம் இருவழிப் பாதையாக

அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், அந்த வாலாங்குளம் பாலம் இருவழிப் பாதையாக அமைக்கப்படுமா என்று கேட்கிறார்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இருவழிப் பாதைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் திருப்பூரிலே உருவாக்கப்பட்ட Ring பாதையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

வினா எண் 111, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-05

111—

கோயில் நிலம்

***7644—திரு. மீ. அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில்களுக்குச் சொந்தமான இடத்தில் பல ஆண்டுகளாகக் குடியிருக்கும் ஏழை, நடுத்தர மக்களுக்குத் தகுதிக்கேற்ப இலவசமாகக் குத்தகை அடிப்படையில் அல்லது விலைக்கு அந்த இடத்தைத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,